www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

10ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2025

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்புகள் :** (i) இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டது.
(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை .............'
   அ) நிலத்திற்கேற்ற விருந்து
   ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து
   ஈ) உற்றாரின் விருந்து

2. தொடர்களை முழுமை செய்வதற்குப் பொருத்தமான தொழிற்பெயர்களைத் தெரிவு செய்க.
   பொதுவாழ்வில் ............. கூடாது. ............. இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது.
   அ) புதையல், புதைத்தல்
   ஆ) சுட்டல், சுடுதல்
   இ) நடித்தல், நடிப்பு
   ஈ) காணுதல், காட்சி

3. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி.
   அ) உவமை
   ஆ) தற்குறிப்பேற்றம்
   இ) உருவகம்
   ஈ) தீவகம்

4. வெண்பா .................. ஓசை உடையது.
   அ) செப்பல்
   ஆ) அகவல்
   இ) துள்ளல்
   ஈ) தூங்கல்

5. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..............
   அ) நாட்டைக் கைப்பற்றல்
   ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல்
   ஈ) கோட்டையை முற்றுகையிடல்

6. '<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>' நிலத்துக்கு நல்ல உரங்கள். - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது :
   அ) இலையும் சருகும்
   ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும்
   ஈ) சருகும் சண்டும்

7. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ........... வேண்டினார்.
   அ) கருணையன், எலிசபெத்துக்காக
   ஆ) எலிசபெத், தமக்காக
   இ) கருணையன், பூக்களுக்காக
   ஈ) எலிசபெத், பூமிக்காக

8. 'வீசுதென்றல்' - தொகையின் வகையைத் தேர்க.
   அ) வேற்றுமைத்தொகை
   ஆ) வினைத்தொகை
   இ) பண்புத்தொகை
   ஈ) உவமைத்தொகை

9. பின்வருவனவற்றுள் முறையான தொடர் :
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது :
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம்
   ஈ) வெளிநாட்டு முதலீடுகள்



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



11. பொருத்தமானதைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க.
விருந்தும் மருந்தும் .............
அ) குப்பையிலே ஆ) உள்ளளவும்
இ) மூன்று நாள் ஈ) ஒரு சோறு பதம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.
அ) நற்றிணை
ஆ) பரிபாடல்
இ) முல்லைப்பாட்டு
ஈ) மலைபடுகடாம்

13. பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனையைத் தேர்க.
அ) உருஅறி - உந்துவளி
ஆ) கருவளர் - உருஅறி
இ) விசும்பில் - கருவளர்
ஈ) உருஅறி - கிளர்ந்த

14. 'ஊழ் ஊழ்' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.
அ) உரிச்சொல்தொடர்
ஆ) பெயரெச்சத்தொடர்
இ) வினையெச்சத்தொடர்
ஈ) அடுக்குத்தொடர்

15. பாடலின் ஆசிரியரைத் தேர்க.
அ) இளங்கோவடிகள்
ஆ) பரஞ்சோதி முனிவர்
இ) கீரந்தையார்
ஈ) பெருங்கௌசிகனார்

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **21–வது** வினாவிற்குக் **கட்டாயமாக** விடையளிக்கவும். [4 × 2 = 8]

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) புதிய படைப்புகள் உருவாக மொழிபெயர்ப்பு உதவுகிறது.
ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்.

18. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

19. 'நச்சப்படாதவன்' செல்வம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

20. குறிப்பு வரைக - அவையம்.

21. 'பொருள்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். [5 × 2 = 10]

22. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

23. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக - கிளர்ந்த

25. கலைச்சொற்கள் தருக.
அ) Classical literature
ஆ) Emblem

26. மரபுத் தொடருக்கான பொருளறிந்து, தொடரில் அமைத்து எழுதுக.
அ) கண்ணும் கருத்தும்
ஆ) அள்ளி இறைத்தல்

27. தீவக அணியின் வகைகள் யாவை?

28. புதிர்களுக்குரிய பொருத்தமான சொற்களை எடுத்தெழுதுக.
அ) நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
ஆ) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்.
(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [2 × 3 = 6]

29. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**30.** உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள், "நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியதற்குக் காரணமுண்டு; திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன்; ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லையென்று உறுதியாகக் கூறுவேன். இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச் சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம்" என்று கூறினார்.

அ) சிலம்புச் செல்வர் என அழைக்கப்படுவர் யார்?

ஆ) தமிழினத்தின் பொதுச் சொத்து எது?

இ) பத்தியில் இடம்பெறும் இரண்டு நூல்களின் பெயர்களை எழுதுக.

**31.** சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34 – க்குக் கட்டாயமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

**32.** "மாளாத காதல் நோயாளன் போல்"

- என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

**33.** வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

**34.** அடிபிறழாமல் எழுதுக.

அ) 'வெய்யோனொளி'.... - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். **அல்லது**

ஆ) 'அன்னை மொழியே' எனத் தொடங்கி 'மண்ணுலகப் பேரரசே!' என முடியும் 'அன்னை மொழியே' பாடல்.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

**35.** அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

**36.** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**37.** நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.

- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [5 × 5 = 25]

**38.** அ) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

**அல்லது**


ஆ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

**39.** அ) நீங்கள் பல்பொருள் அங்காடி ஒன்றில் வாங்கிய உணவுப் பொருள் குறிப்பிட்ட தேதியைத் தாண்டி, கெடுநாள் முடிந்ததாக இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

**அல்லது**

ஆ) கலைத்திருவிழாவில் மாநில அளவில் நடைபெற்ற நடனப்போட்டியில் வெற்றிபெற்ற உங்கள் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**40.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41.** எண். 20, பாரதிதாசன் நகர், விழுப்புரம் மாவட்டத்தில் வசிக்கும் கலைச்செல்வியின் மகள் கவிதா விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை கவிதாகவாக எண்ணிக் கொடுக்கப்பட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

**42.** அ) இன்சொற்களைப் பேசுவதனால் ஏற்படும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.

**அல்லது**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



ஆ) மொழிபெயர்க்க :
(i) Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein
(ii) Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
(iii) It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
(iv) Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.
(v) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. – Rita Mae Brown

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் **விரிவான** விடையளிக்கவும். [3 × 8 = 24]

**43.** அ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு 'பன்முகக் கலைஞர்' என்ற தலைப்பில் விவரித்து எழுதுக.

**அல்லது**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**44.** அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்கவும்.

**அல்லது**

ஆ) கடின உழைப்பாளர் - சிறப்புமிக்கவர் - போற்றத்தக்கவர் - என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளை விவரித்து எழுதுக.

**45.** அ) குறிப்புகளைப் பயன்படுத்தி நீங்கள் சென்று வந்த பொருட்காட்சியைப் பற்றிக் கட்டுரை எழுதுக.
முன்னுரை - நுழைவாயில் - புத்தக, வேளாண்மை, கேளிக்கை, போக்குவரத்து அரங்குகள் - பொழுதுபோக்கு அமைவிடங்கள் - உணவுக் கூடங்கள் - முடிவுரை

**அல்லது**

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
முன்னுரை - பிறப்பு - கல்வி - விண்வெளி ஆர்வம் - சாதனைகள் - முடிவுரை

## விடைகள்

1. ஆ) இன்மையிலும் விருந்து
2. இ) நடித்தல், நடிப்பு
3. இ) உருவகம்
4. அ) செப்பல்
5. இ) வலிமையை நிலைநாட்டல்
6. ஈ) சருகும் சண்டும்
7. அ) கருணையன், எலிசபெத்துக்காக
8. ஆ) வினைத்தொகை
9. இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
10. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
11. இ) மூன்று நாள்
12. ஆ) பரிபாடல்
13. அ) உருஅறி - உந்துவளி
14. ஈ) அடுக்குத்தொடர்
15. இ) கீரந்தையார்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



16. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள் :**
   (i) வாருங்கள்
   (ii) அமருங்கள்
   (iii) தண்ணீர் அருந்துங்கள்!
   (iv) உங்களைப் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டதே! எப்படி இருக்கிறீர்கள்?
   (v) உங்கள் வீட்டில் அனைவரும் நலமா?
   (vi) உணவு உண்ணலாம் வாருங்கள்!

17. அ) புதிய படைப்புகள் உருவாக எது உதவுகிறது?
   ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் யார்?

18. (i) பாசவர் - வெற்றிலை விற்போர்
   (ii) வாசவர் - நறுமணப் பொருள்களை விற்பவர்கள்
   (iii) பல்நிண விலைஞர் - பல்வகை இறைச்சிகளை விலை கூறி விற்பவர்கள்
   (iv) உமணர் - உப்பு விற்போர்

19. **'நச்சப்படாதவன்' செல்வம் :** பொருள் - பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர்.

20. (i) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.
   (ii) உறையூரிலிருந்த அறஅவையம் தனிச் சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.
   (iii) மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. மேலும் அங்குள்ள 'துலாக்கோல் போல நடுநிலைமிக்கது' என்கிறது.

21. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
   பொருளல்ல தில்லை பொருள். **– திருவள்ளுவர்**

22. (i) மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? **– அறியா வினா**
   (ii) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லை, மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? **– ஐய வினா**

23. அ) ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.

24. **கிளர்ந்த – கிளர் + த்(ந்) + த் + அ**
   கிளர் - பகுதி
   த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
   த் - இறந்தகால இடைநிலை
   அ - பெயரெச்ச விகுதி

25. அ) Classical literature - செவ்விலக்கியம்
   ஆ) Emblem - சின்னம்

26. அ) வேலன் தோட்டத்தில் தான் நட்டு வைத்த செடியைக் **கண்ணும் கருத்துமாய்** வளர்த்தான்.
   ஆ) உழைக்காமல் பெற்ற பணத்தைச் சிக்கனமாக செலவு செய்யாமல் அதற்கு இதற்கு என்று **அள்ளி இறைத்தான்** முருகன்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



27. தீவக அணி மூன்று வகைப்படும் : அவை

(i) முதல்நிலைத் தீவகம்

(ii) இடைநிலைத் தீவகம்

(iii) கடைநிலைத் தீவகம்

28. அ) விண்மீன்

ஆ) காடு.

29. **எதிர்காலத் தொழில்நுட்பம் :** எதிர்காலத்தில் அறிவியல் தொழில்நுட்பம் வியக்கத்தக்க அளவிற்கு முன்னேற்றம் அடையும். அனைத்துத் துறைகளிலும் மாபெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி மனிதகுலத்துக்கு சிறப்பானதொரு நன்மையைச் செய்யும்.

**குடும்பங்கள் :** எதிர்காலத்தில், பெற்றோர்கள் ரோபோவிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்வார்கள். ரோபோக்கள் வயதானவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடன் பேச்சுக் கொடுத்து உற்ற தோழனாகப் பேணிக் காக்கும்.

**கடினமான பணிகள் :** மனிதர்கள் செய்ய இயலாத, கடினமான பணிகளையும், மனித முயற்சியில் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய பணிகளையும் ரோபோக்கள் செய்யும். மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றும்.

**வணிகம் :** பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும் உதவும்.

**வீடு மற்றும் அலுவலகங்கள் :** ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, போன்று பணியாள் போல் அனைத்து வேலைகளையும் செய்யும் வகையில் தொழில்நுட்பம் மாறும்.

**போக்குவரத்து ஊர்திகள் :** விபத்துகள் குறையும், போக்குவரத்து நெரிசல், பயண நேரம் குறையும், எரிபொருள் சேமிக்கப்படும், மக்கள் நலம் காணுவார்.

**மருத்துவம் மற்றும் கல்வியறிவு :** நோய்களைக் கண்டறிந்து மருத்துவம் செய்து குணப்படுத்தும். கல்விச் சார்ந்த செயல்பாட்டில் மாபெரும் புரட்சி ஏற்படும். மனிதகுலத்துக்கு நன்மை பயக்கும்.

30. அ) ம.பொ.சி.

ஆ) இளங்கோ தந்த சிலம்பு

இ) திருக்குறள், கம்பராமாயணம்.

31. **சோலைக்காற்றும் மின் விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் உரையாடல் :**

**சோலைக்காற்று** : என்ன நண்பரே நலமா?

**மின் விசிறிக் காற்று** : நான் நலம்தான். ஆனால் உன்னைப்போல் நலமாக இல்லை.

**சோலைக்காற்று** : என்ன இப்படிச் சலித்துக் கொள்கிறீர்?

**மின் விசிறிக் காற்று** : நான் என்ன உன்னைப் போலவா? எங்குப் பார்த்தாலும் சுற்றித் திரிவதற்கு என்னைத்தான் மனிதர்கள் நான்கு சுவருக்குள்ளேயே அடைத்து விட்டார்களே? என்னுடைய இயக்கம் பிறருடைய கட்டுப்பாட்டில் அல்லவா இருக்கிறது.

**சோலைக்காற்று** : என்ன இப்படிக் கூறிவிட்டீர்!

**மின் விசிறிக் காற்று** : உனக்கென்ன உன் செயல் உன்னிடம்தானே உள்ளது. சோலையில் உள்ள மரம், செடி, கொடிகள் எல்லாமே உன்னால்தானே அசைகிறது.

**சோலைக்காற்று** : என்ன என்னால் அசைகிறதா? அவை அசையும் போதுதான் நான் உருவாகிறேன். அவ்வாறு உருவாகும்போதுதான் பல மலர்களில் இருந்து நறுமணத்தை எடுத்து வந்து எல்லா இடங்களிலும் பரப்புகிறேன்.

**மின் விசிறிக் காற்று** : நீதானே அவற்றை ஆட்டி வைக்கின்றாய்? உன் வேகத்தினால் பல முறை அவற்றை அழித்தும் இருக்கிறாய்?

**சோலைக்காற்று** : இது தெரியாமல்தானே பலரும் குழம்புகிறார்கள். ஆனால் அதற்கு விடை கிடைக்கவில்லை.

**மின் விசிறிக் காற்று** : எது எப்படியோ நீயும் நானும் மனிதர்களுக்கு நன்மையைத்தான் செய்கிறோம்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**சோலைக்காற்று** : சரியாகச் சொன்னாய். என்ன உன் வேகம் குறைந்து விட்டதே?
**மின் விசிறிக் காற்று** : மின்சாரத்தைத் துண்டித்து விட்டார்கள்.
**சோலைக்காற்று** : சரி! சரி! நீயும் கொஞ்சம் ஓய்வெடு, மீண்டும் சந்திப்போம்.

32.

| உவமை | உவமேயம் |
|---|---|
| மருத்துவர் | வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் |
| நோயாளி | குலசேகராழ்வார் தன்னைக் குறிப்பிடுவது |
| உடலில் ஏற்பட்ட புண்ணை கத்தியால் அறுத்துச் சுடுவது | பெருமாள் தனது விளையாட்டால் நீங்காத துன்பத்தைத் தருவது |
| நோயாளி மருத்துவரை நேசிப்பது | குலசேகராழ்வார் எப்பொழுதும் இறைவன் அருளையே எதிர்பார்த்து வாழ்வது. |

33. ஒன்றை ஆக்குவதை விட, வாங்குவதை விட அதை பராமரிப்புச் செய்வதில் தான் அதன் நீடித்த தன்மையைக் காணமுடிகிறது. அது பொருளாக, வீடாக, உயிராக இருந்தாலும் அனைத்துக்கும் பொருந்தும். வீடு தன் பொலிவை இழக்கிறபோது சுவர், சன்னல், போன்றவற்றில் அழுக்குப் படிகிறது அதை வாளித் தண்ணீர் கொண்டு தூய்மை செய்து பிறகு கந்தைத் துணி கொண்டு அதை நன்றாக ஈரம் போக துடைத்தெடுக்க வேண்டும். பிறகு சாயக்குவளையில் கட்டைத் தூரிகை கொண்டு வண்ணம் பூச வேண்டும். அப்போது தான் அது நீண்ட காலத்திற்கு நிலைக்கும்.

34.
அ) வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

– **கம்பர்**

ஆ) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! – **பாவலரேறு**
**பெருஞ்சித்திரனார்**

35.
(i) அவந்திநாட்டு மன்னன் மண்ணாசை காரணமாக மருதநாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்கிறான். இவ்வாறு செல்வது வஞ்சித்திணை.
(ii) தன் நாட்டைக் கைப்பற்ற வந்த அவந்திநாட்டு மன்னனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிட்டான் மருதநாட்டு மன்னன். இது காஞ்சித்திணை ஆகும்.

36. இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி **நிரல் நிறையணி** ஆகும்.

**அணியின் இலக்கணம்:**

நிரல் = வரிசை; நிறை = நிறுத்துதல். சொல்லையும், பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை ஆகும்.

**சான்று :** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**பாடலின் பொருள் :**

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

**அணிப்பொருத்தம் :**

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா / டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய்/யா | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| மன்/னவன் | நேர் நிரை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

38.

**அ) ஆற்றுப்படை விளக்கம்:**

(i) ஆற்றுப்படுத்தும் கூத்தன், "வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக" என்று கூறுதல் ஆற்றுப்படை.

**சிற்றூரை அடைதல்:**

(i) "பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்

(ii) இரவில் சேர்ந்து தங்குங்கள்

(iii) எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணியுங்கள்.

(iv) சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்

(v) அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

**நன்னனின் கூத்தன்:**

பகைவரை பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும், மானமும் இவற்றையும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**உணவாகப் பெறுவீர்கள்:**

(i) உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள்.

(ii) அவர் துன்பம் தீர இனிய சொற்கள் கூறுவார்கள்.

(iii) அங்கு, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

**அல்லது**

**ஆ)** (i) **அரிய செயல் :** தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.

(ii) **ஐந்து பண்புகள் :** மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

(iii) **சூழ்ச்சிகள் :** இயற்கையான நுண்ணறிவும் நூலறிவும் உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகளும் நிற்க இயலாது.

(iv) **நடைமுறைகளை அறிதல் :** ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும் உலகியல் நடைமுறைகள் அறிந்து செயல்பட வேண்டும்.

**அமைச்சருக்குச் சொன்ன அனைத்தும் நமக்கும் பொருந்துதல்:**

(i) இவையனைத்தும் நமக்கும் பொருந்தும். எவ்வாறெனில், ஒரு செயலைச் செய்வதற்குத் தேவையான கருவி, காலம், செயலின் தன்மை, செயலின் முறை ஆகியவற்றை அறிந்து செயல்பட்டால்தான் நாம் செய்யும் செயல் சிறப்பாக அமையும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(ii) அதுமட்டுமன்றி நாம் நூலறிவைப் பெற வேண்டும். மதி நுட்பமாகிய இயற்கையான அறிவைப் பெற வேண்டும். உலக அறிவான அனுபவ அறிவைப் பெற வேண்டும். மனவலிமையுடன் செயல்பட வேண்டும். விடாமுயற்சியுடன் செயலாற்ற வேண்டும்.

(iii) இவற்றை மேற்கொண்டால்தான் நாமும் பிறரால் போற்றப்படுபவர்களாவோம். இவ்வாறு அமைச்சர்களுக்குரிய இலக்கணம் நமக்கும் பொருந்துகிறது.

39.

**அ) அனுப்புநர்**

செல்வம் . ம
எண் 20, காந்தி சாலை,
மதுரை.

**பெறுநர்**

உயர்திரு உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம்,
சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** பல்பொருள் அங்காடி ஒன்றில் வாங்கிய உணவுப் பொருள் கெடுநாள் முடிந்த தொடர்பாக.

வணக்கம். நான் மதுரை பேருந்து நிலையத்தில் இருக்கும் பல்பொருள் அங்காடி ஒன்றில் உணவுப் பொருள் வாங்கினேன். வீட்டிற்கு சென்று பார்த்த போது தெரிந்தது அப்பொருள் குறிப்பிட்ட தேதியைத்தாண்டி, கெடுநாள் முடிந்து இருந்தது.

இதுபோன்ற தரமற்ற உணவை விற்கும் பல்பொருள் அங்காடியை தரப் பரிசோதனை செய்ய வேண்டும். இது என்னுடைய வேண்டுகோள் மட்டும் இல்லை. என்னைப் போல் பிறருடைய எதிர்பார்ப்பும் இதுதான். தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதத்துடன் தரமற்ற உணவுப் பொருளுக்கான சான்றும் இணைத்துள்ளேன்.

நன்றி!

சென்னை
16.06.20xx

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செல்வம் .ம

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம்,
சென்னை.

**அல்லது**

**ஆ)**

சென்னை,
21.09.20xx

பாசமுள்ள நண்பன் மணிமாறனுக்கு,

இங்கு நான், என் பெற்றோருடன் நலமாக இருக்கிறேன். நேற்று வெளி வந்த பத்திரிக்கைகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் உன் இமாலய வெற்றியை அறிந்து பெருமிதம் அடைந்தேன். மாநில அளவில் நடைபெற்ற நடனப்போட்டியில் முதல் பரிசு பெற்றதை அறிந்து மனமகிழ்ந்தேன்.

நீ இப்பொழுது பெற்றுள்ள வெற்றி மேலும் மேலும் பல சிகரங்களைத் தொட வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும். வாழ்க! வளர்க.

உன் அன்பு நண்பன்
செ.முரளி

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
அ.மணிமாறன்
எண்.10 தெற்கு வெளிவீதி
மதுரை - 625 001

அஞ்சல் தலை

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

40. அறிவியல் விந்தையாகவும்
ஆடம்பரக் குறியீடாகவும்
இயந்திர நண்பனாகவும்
ஈறிலா தரவுகளையும் தந்து
உலகத்தை எந்தன் கையில் கொடுத்தாய் - நீ வந்ததும்
ஊரும் மறந்தேன் உலகம் மறந்தேன் உறவுகள் தவிர்த்தேன்
எந்தன் அடிமைத்தனம் என்று மாறுமோ?
ஏங்கித் தவிக்கும் உறவுகள் நட்புகள்!
செல்பேசி - என்று பெயர் வைத்தது யார்?
சென்றுவிட்டது உறவுகள் மட்டுமல்ல!
எத்தனை எத்தனை இழப்புகள்! - இதிலிருந்து
மீண்டு வருவேனா! உன்னால்
அழிந்த சிட்டுக்குருவியைக் காண்பேனா?

41. **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் | : கவிதா |
| 2. | பாலினம் | : பெண் |
| 3. | பிறந்த தேதி | : 7-6-20xx |
| 4. | தேசிய இனம் | : இந்தியா |
| 5. | இரத்த வகை | : B பாசிட்டிவ் |
| 6. | உயரம் மற்றும் எடை | : 4 ½ அடி |
| 7. | பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் | : கலைச்செல்வி |
| 8. | வீட்டு முகவரி | : 20, பாரதிதாசன் நகர், விழுப்புரம் |
| 9. | தொலைபேசி/ அலைபேசி எண் | : 82233xxxxx |
| 10. | இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : 10ஆம் வகுப்பு |
| 11. | பள்ளியின் முகவரி | : நகராட்சி மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் |
| 12. | சேரவிரும்பும் விளையாட்டு | : கால்பந்து |

சேர்க்கை எண் : 1201
இடம் : விழுப்புரம்
நாள் : 2-5-20xx

மாணவரின் கையெழுத்து
**கவிதா**
பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து
**கலைச்செல்வி**

www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



42.

**அ) இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் :**

| இன்சொல் வழி |
|---|
| பிறர் மனம் மகிழும் |
| அறம் வளரும் |
| புகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் |
| அன்பு நிறையும் |

**அல்லது**

**ஆ)** (i) ஒரு பள்ளியில் கற்றதை மறந்துவிட்டால், பள்ளியில் கற்ற கல்வியினால் பயன் என்னே!

**– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

(ii) பெரும்பாலும் நாளையே இந்த வாரத்தின் மிகவும் பரபரப்பான நாள். **– ஸ்பானிஷ் பழமொழி**

(iii) நம் இருண்ட தருணங்களில்தான், நாம் ஒளியைக் காண கவனம் செலுத்த வேண்டும். **– அரிஸ்டாட்டில்**

(iv) வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பது மரணத்திற்குரியதல்ல. தொடர்ந்து முனைகின்ற தைரியமே கணக்கில் கொள்ளப்படுகிறது.

**– வின்ஸ்டன் சர்ச்சில்**

(v) கலாச்சாரத்தைக் காட்டுகின்ற பாதை மொழியாகும்; அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள்; எங்குச் செல்கிறார்கள் என்பதைத் தெளிவுப்படுத்தும்.

**– ரீட்டா மே ப்ரௌன்**

43.

**அ) பன்முகக் கலைஞர்**

**போராட்டக் கலைஞர் :**

கலைஞர் தாம் பிறந்த திருக்குவளையில் தொடக்கக் கல்வியை நிறைவு செய்தார். திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்குதான் 1921இல் சென்னை மாகாணத்திற்கு நீதிக் கட்சியின் சார்பில் முதல் அமைச்சராக இருந்த பனகல் அரசரின் சாதனைகளைக் கூறும் நூலைப் படித்தார். அந்நூல் அவருக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்தது. பள்ளி முடிந்த மாலைவேளைகளில் தாம் எழுதிய 'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்!' என்று தொடங்கும் பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டித் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் வந்தபோது அவருக்கு வயது பதினான்கு. இவ்வாறு போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.

**பேச்சுக் கலைஞர் :**

இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளாலும் பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றலாலும் கவரப்பட்டவர் கலைஞர். மேடைப் பேச்சினில் பெருவிருப்பம் கொண்டவர். இவர் 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்', 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' ஆகிய அமைப்புகளைத் தொடங்கினார். தாம் சென்றவிடமெல்லாம் செறிவாகத் தமிழ் பேசித் தன்மானத்தை, தமிழ் உணர்வை, தமிழிலக்கியத்தை பகுத்தறிவை, மத ஒருமைப்பாட்டை, சமூக நல்லிணக்கத்தை ஊட்டினார்.

'இளைய தலைமுறையே; எழுவாய்!
செயப்படுபொருள் பயனிலையேல் விழுவாய்!
அறிவில் மூத்தோரரைத் தொழுவாய்!
அரிய பயன் காண ஆழ உழுவாய்!'

என்று தமக்கேயுரிய நடையில் பேசுவது கலைஞருடைய முத்தான பேச்சுக்கு ஒரு முத்திரை.!

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**நாடகக் கலைஞர் :**

கலைஞர் எழுதிய 'பழநியப்பன்' என்னும் முதல் நாடகம் 1944ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 'சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப் பூ' உட்பட பல நாடகங்களை எழுதினார். தான் எழுதிய 'தூக்குமேடை' என்னும் நாடகத்தில் நடிகர் எம்.ஆர்.இராதாவின் வேண்டுகோளுக்காக மாணவர் தலைவராக நடித்தார். அந்நாடகத்திற்கான பாராட்டு விழாவில்தான் அவருக்குக் "கலைஞர்" என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.

**திரைக் கலைஞர் :**

மக்கள்திலகம் எம்.ஜி.ஆர் முதன்முதலாக நடித்த 'ராஜகுமாரி' (1947) படத்துக்கான முழுவசனத்தையும் எழுதினார். படம் மிகப்பெரிய வெற்றியடைந்தது. தமிழ்த் திரையுலகின் திருப்புமுனையாகப் பாவலர் பாலசுந்தரம் கதை எழுதிய 'பராசக்தி'க்குத் திரைக்கதை, வசனம் எழுதினார் கலைஞர். படம் வெளிவந்த மறுநாள் பாரெங்கும் பராசக்தி பற்றித்தான் பேச்சு! தமது முதல் படத்திலேயே புகழின் உச்சத்தைத் தொட்டார் சிவாஜிகணேசன்! புகழ்மலையின் சிகரத்தைத் தொட்டார் கலைஞர்.

'மனசாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது.' 'பொறுத்தது போதும் மனோகரா! பொங்கி எழு' போன்ற வசனங்கள் கலைஞரின் எழுத்துக் கூர்மையைக் காலத்திற்கும் எடுத்துச் சொல்லும். 1947ஆம் ஆண்டு எழுதத் தொடங்கிய கலைஞர் 2011இல் தொலைக்காட்சிக்காக 'இராமானுஜர்' தொடர் வரையிலும் நிறைவாய் எழுதினார்.

**இயற்றமிழ்க் கலைஞர் :**

தமிழ் மீது தீராத பற்று கொண்டவர் கலைஞர். இலக்கியத்திலும் பெரும்பங்காற்றினார். நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில் குஞ்சு உள்ளிட்ட பல சிறுகதைகளையும் ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச்சிங்கம், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். சங்கத் தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவை பழந்தமிழ் இலக்கியத்திற்குக் கலைஞர் உரை எழுதியதற்குச் சான்றுகளாகும். இலக்கண நூலுக்கு இலக்கியச் சுவை தோன்றுமாறு அமைந்த புதுமை நூலே கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா!'. மேலும் 'வல்லினம், மெல்லினம், இடையினம் ஒன்றுபட்டுத் தமிழ் என்றே தகத்தகாய ஒளிபரப்பிடும்போது தமிழர்கள் பல கூறுகளாகப் பிளவுபட்டு பாழ்பாட்டுக் கிடப்பது நியாயந்தானா?" என எழுத்துகளின் ஒற்றுமையைக் கூறவந்த இடத்தில், தமிழர்கள் தமக்குள் பிளவுப்பட்டு இருப்பதைக் கூறியவிதம் கலைஞரது செம்மை மனத்தைச் சிறப்புடன் காட்டும்.

**அல்லது**

**ஆ) முன்னுரை:**

பொருள்வளம், சுவைவளம், சொல்வளம் என எல்லாவற்றிலும் குறையே காணமுடியாத மொழி, தமிழ்மொழி இதன் சிறப்பை, சில சொற்களின் உருவாக்க அடிப்படையில் கண்டு வியக்கலாம். இங்குத் தமிழின் சொல்வளம், சொல்லாக்கத்திற்கான தேவை குறித்து உரைக்குறிப்புகளைக் காணலாம்.

**சொல்வளம் :**

(i) தமிழ்நாட்டுப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர்கள். எத்துணையோ மொழிகளினின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும், நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரே சொல் மட்டுமே உள்ளது.

(ii) ஆனால் தமிழ் மொழியில் அதன் வன்மை, மென்மையின் அடிப்படையில் தாள், இலை, தோகை, ஓலை எனத் தமிழர் பாகுபாடு செய்துள்ளனர்.

(iii) தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் பிறமொழிகளில் இல்லை.

(iv) தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**சொல்லாக்கத்திற்கான தேவை :**

(i) திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

(ii) பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

(iii) அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய சொற்களுக்கான கலைச்சொல் வளத்தைப் பறை சாற்றுதல் அவசியமாகும்.

(iv) தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் புதிய சொல்லாக்கம் தேவை.

(v) பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும்.

(vi) நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைகளுக்குப் பயன்படும் சொற்களைத் தமிழில் சொல்லாக்கம் செய்து நம் மொழியின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

**முடிவுரை:**

வேருக்கு நீர் புத்துணர்வு அளிப்பது போல், ஒரு மொழியை சொற்களே மறுமலர்ச்சி அடைய செய்கிறது. ஆக சொல்வளமே மொழியைக் காப்பதில் பெரும் உதவி செய்கிறது.

44.

**அ) முன்னுரை :**

பருத்திக்காட்டில் வேலைசெய்யும் பாட்ஸி, சாம் இவர்களின் மகள் மேரி. படிப்பறிவற்ற இவர்களின் குடும்பத்தில் முதல் கல்விச்சுடர் ஏற்றியவர் கருப்பர் இனத்தைச் சார்ந்த மேரி. அதற்கான சூழல் ஏற்பட்டதையும் அதனைச் சிரமேற்கொண்டு பணியாற்றிய மேரியையும் இக்கதை மூலம் அறியலாம்.

**மேரியின் குடும்பம் :**

மேரியின் தந்தை சாம், தாய் பாட்ஸி, பாட்டி மற்றும் சகோதர சகோதரிகளை உடைய ஏழ்மையான குடும்பம் மேரியின் குடும்பம். பகலில் பருத்தித்தோட்டத்தில் வேலை செய்துவிட்டு மாலை நேரத்தில் எல்லோரும் பாடுவதும் பிரார்த்தனை செய்வதுமாக இருப்பார்கள்.

**மேரியின் மனவருத்தம் :**

ஒரு நாள் மேரி தன் தாயுடன் வில்சன் வீட்டிற்குச் சென்றாள். அங்கு வெள்ளைக் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டாள். மேரியின் பார்வை அங்குள்ள புத்தகத்தின் மீது சென்றது. மேரி அதை எடுத்தாள். வெள்ளைச் சிறுமி புத்தகத்தை "என்னிடம் கொடு நீ இதை எடுக்கக்கூடாது. உன்னால் படிக்க முடியாது "என்று கூறி புத்தகத்தைப் பிடுங்கிக் கொண்டாள். அந்த வார்த்தை மேரிக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது. உடனே அந்த வீட்டிலிருந்து மேரி வெளியேறினாள்.

**மேரியின் மனவோட்டம் :**

அந்த நாள் முழுவதும் அவள் துயரத்துடன் இருந்தாள். 'ஆம்', நான் படிக்க வேண்டும். நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் எழுதப் படிக்கப் போகிறேன்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டே இருந்தாள். மேரி தந்தையிடம் பள்ளிக்கூடம் செல்வது பற்றிக் கேட்டாள். அவர் "இங்கே நமக்கென்று பள்ளிக்கூடமே கிடையாதேம்மா" என்று கூறினார். "நான் படிக்க விரும்புகிறேன், நான் படிக்க விரும்புகிறேன்" என்று கூறிக்கொண்டே இருந்தாள்.

**புதிய நம்பிக்கை :**

மிஸ் வில்ஸன் மேரியைப் பார்த்து "உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். உன்னுடைய பருத்தி எடுப்பு வேலையை விரைவாக முடித்துவிட்டு மேயெஸ்வில்லிக்கு வந்துவிடு என்றார். உன்னால் படிக்க முடியாது என்று மேரியின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்த இந்த வார்த்தைகள் இனி ஒலிக்காது. அக்குடும்பத்திலிருந்து முதல் பெண் படிக்கப் போகிறாள். புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**மேரி பெற்ற கல்வியின்பம் :**

மேரி, பள்ளிக்குச் செல்ல தயாரானாள். புதிதாக சிலேட், பலப்பம் வாங்கித்தந்தார் அவள் தந்தை. மேரி தான் பெற்ற புதிய கல்வியினால் முக்கியமான ஒரு நபராக மாறிக் கொண்டிருந்தாள். அண்டைவீட்டாரின் சம்பளக்கணக்கு, கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளைத் தீர்த்துவைத்தாள். அந்த வருடத்தின் கடைசியில் மேரிக்கு பட்டமளித்தல் இருந்தது. முதல் பட்டமளிப்பு விழா என்பதால் மேயெஸ்வில்லியின் மக்களுக்கு அது மிக முக்கியத்துவம் வாழ்ந்த ஒன்றாக இருந்தது.

**மேரியின் மேல்படிப்பு :**

ஒரு நாள் வில்ஸன் மேரியிடம் மேற்குப் பகுதியில் வாழும் வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பினக் குழந்தையின் படிப்பிற்காகப் பணம் அனுப்பியதாகவும் அதற்கு உரியவள் மேரி என்றும் கூறினாள். மேல்படிப்புக்கு டவுனுக்குப் போகவேண்டும் என்றும் கூறினாள். இதையறிந்த அப்பகுதி வாழ் மக்கள் அவளை அண்டை வீட்டுக்காரர் ஒருவர் பண்ணை வாகனத்தில் அழைத்துச் சென்றார்.

**முடிவுரை :**

மனதில் ஆர்வமும் எண்ணத்தில் முயற்சியும் இருந்தால் சாதிக்கலாம் என்பதற்கு மேரியின் வாழ்வில் அவள் பெற்ற கல்வி சான்றாகிறது. உலகில் சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடிப் பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக உருவாக்குகிறார்கள். அவ்விதமாக மேரி ஒற்றைச்சுடராக வந்து ஓராயிரம் சுடரை ஏற்றிவிட்டாள்.

**அல்லது**

**ஆ) குறிப்பு :** பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர்...

**பூ விற்பவர் :** பெயர் - திருமதி. ஆண்டாள், ஊர்- செஞ்சி, வயது -75.

இவர் எதற்கும் ஆசைப்படாதவர், மென்மையானவர், அன்பானவர். தன் பிள்ளைகள் ஏழு பேரையும் படிக்க வைத்து நல்ல நிலைக்கு உயர்த்தியவர். தன்னுடைய கூடையில் பூ விற்கும்போது கல்வியின் முக்கியத்துவத்தையும் சேர்த்துக் கூறுவார். ஒவ்வொருவருக்கும் தன்னுடைய பிள்ளைகள் கல்வி மூலம் உயர்ந்திருக்கிறார்கள் என்றும், அவர்களைப் போல நீங்களும் கல்வியறிவுப் பெற்று உயர வேண்டும் என்றும் தலையில் பூ கூடையோடு, தெருத் தெருவாக போகும்போது எடுத்துக் கூறுவார். அன்பான வார்த்தைகளால், இந்த தள்ளாத வயதிலும், அனைவரது மனதிலும் இடம் பெற்றவர் இவர்.

**சாலையோர உணவகம் நடத்துபவர் :** பெயர் - திருமதி. கு.மாரியம்மாள், வயது -46.

இவர் சாலையோர தள்ளுவண்டியில் உணவகம் நடத்துபவர். அந்த காலத்தில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர். கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திருப்பவர். கல்வியைப் பெற்றால் உலகமே தன்னுள் அடங்கும் என நினைப்பவர். தன்னுடைய கடைக்கு வரும் அனைவரையும் அன்பான முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு உணவை உபசரித்து கல்வி பற்றிய அறிவை எடுத்துரைப்பார். புதுப்புது கல்விச் செய்திகளை கூறிக் கொண்டே இருப்பார். நன்கு படிக்கும் குழந்தைகளைக் கண்டால் ஊக்கப்படுத்துவார். படிக்காமல் இருக்கும் குழந்தைகளை தேடிப்பிடித்து, அவர்களுடைய வீட்டுக்குச் சென்று கல்வியின் முக்கியத்துவம் பற்றி அக்குழந்தைக்கு அன்பாக எடுத்துக்கூறி பள்ளிக்கு அனுப்பி வைப்பார்.

45.

**அ) முன்னுரை :**

சென்னையில் உள்ள தீவுத்திடலில் நடைபெறும் பொருட்காட்சிக்கு நான் குடும்பத்துடன் சென்றேன். என்னுடன் என்னுடைய நண்பர்களும் வந்தனர். ஒருநாள் முழுவதும் நாங்கள் மிகவும் உற்சாகத்துடன் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்தோம்.

**அரசுப் பொருட்காட்சி நுழைவாயில் :**

பொருட்காட்சியில் அரசுத்துறை அரங்குகள், மத்திய அரசு நிறுவனங்களின் அரங்குகள், நூற்றுக்கணக்கான கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. நுழைவுவாயில் அரண்மனை போன்று மிகவும் பெரிய அளவில் பிரம்மாண்டமாய் இருந்தது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**பலவித அரங்குகள் :**

புத்தக, வேளாண்மை, மின்சாரத்துறை, வேளாண்துறை, பால்வளத்துறை, காவல்துறை, போக்குவரத்துத் துறை, இரயில்வே துறை போன்ற அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த துறைகளுக்கான அரசின் சாதனைகள் குறித்த புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

**பொழுதுபோக்கு அமைவிடங்கள் :**

இரவு அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் பலவித கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. சிறுவர்களுக்கான மாறுவேடப் போட்டி, பரத நாட்டியம் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அரங்கிற்குள் அமைக்கப்பட்டிருந்த விளையாட்டுத் திடலில் கூடைப்பந்து, டென்னிஸ், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை அங்கு பலர் விளையாடி கொண்டிருந்ததை கண்டு ரசித்தோம்.

**கேளிக்கை :**

அரங்கிற்குள் முதல் முறையாக விளையாட்டுத் திடல் தனியாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கு சிறியவர் மற்றும் பெரியவர் வரை விளையாடுவதற்கான விளையாட்டு பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. கூடைப்பந்து, டென்னிஸ், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை அங்கு பலர் விளையாடி கொண்டிருந்ததை கண்டு ரசித்தோம். விளையாட்டு வீரர்களின் புகைப்படங்களும் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

**உணவுக் கூடங்கள் :**

வட மற்றும் தென்னிந்திய உணவு வகைகளுடன் கூடிய உணவு விற்பனையகம் இருந்தது. மாலை சிற்றுண்டிகளான பானி பூரி, பேல் பூரி, மசால் சமோசா, சூடான சப்பாத்தி, அப்பளம் மற்றும் மசால் தோசை வகைகளும் அங்கு தயாராக இருந்தன. மேலும்நொறுக்குத் தீனி வகைகள் வண்ண வண்ண பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. என் பெற்றோர் எனக்கும் என் நண்பர்களுக்கும் நொறுக்குத் தீனி வாங்கிக் கொடுத்தார்கள்.

**முடிவுரை :**

அன்று நேரம் போனதே எங்களுக்குத் தெரியவில்லை. தீவுத்திடலில் அலைகடலென மக்கள் கூட்டம், எங்களைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. மீண்டும் வரவேண்டும் என்று எண்ணிக்கொண்டே பொருட்காட்சியை விட்டு வெளியேறினோம்.

**அல்லது**

**ஆ) முன்னுரை :**

விண்வெளிக்கு பயணம் செய்த முதல் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா. விண்வெளி ஆராய்ச்சியில் சிறந்தவர். நல்ல திறமையுடைய பெண் ஆராய்ச்சியாளர் இவர். இந்தியாவே போற்றும் வகையில் விண்வெளியில் மிகச் சிறந்த சாதனை செய்தவர் இவர் எனலாம்.

**பிறப்பும், கல்வியும் :**

இவர் இந்தியாவில் ஹரியானா மாநிலத்தில் 1961-ஆம் ஆண்டு ஜுலை 1-ஆம் தேதி பனாரஸ் லால் சாவ்லாவுக்கும் சன்யோகிதா தேவிக்கும் மகளாக பிறந்தார். கல்பனா சாவ்லாவுக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உள்ளனர். ஆரம்பக் கல்வியை தனது சொந்த ஊரான கர்னல் அரசுப் பள்ளியில் படித்தார்.

**விண்வெளியில் ஆர்வம் :**

கல்பனா சாவ்லா சிறு வயது முதலே விண்வெளித் துறையில் ஆர்வமாக இருந்ததால் அதற்கேற்றாற்போல் சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தியியல் துறையில் இளங்கலைப் பட்டமும், டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் விண்வெளி பொறியியல் துறையில் முதுகலைப் பட்டமும் பெற்றார். 1986-ஆம் ஆண்டு கொலோரடோ பல்கலைக்கழகத்தில் 2-ஆவது முதுகலைப்பட்டமும் பிறகு 1988-ஆம் ஆண்டு விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**விண்வெளி சாதனைகள் :**

1995-ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த கல்பனா சாவ்லா, கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87-இல் பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். முதல் இந்திய கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87-இல் விண்வெளி பயணம் மேற்கொண்டார். இந்த விண்வெளி பயணத்தில் சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார். பின்னர் 2003-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பிய விண்கலம் எஸ்.டி.எஸ். 107-இல் அனுப்பி வைத்தனர். 16-நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பிப்ரவரி-1 ஆம் தேதி பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது அமெரிக்காவின் டெக்சாஸ் வான்வெளியில் கொலம்பிய விண்கலம் வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் அதில் பயணம் செய்த கல்பனா சாவ்லா உள்பட 7 விண்வெளி வீரர்களும் பலியாகினர்.

**முடிவுரை :**

இந்திய பெண்ணாகிய கல்பனா சாவ்லாவை கௌரவிக்கும் விதமாக நியூயார்க் நகரிலுள்ள ஒரு சாலைக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது. வீர மங்கையை இழந்த இந்தியா ஆண்டுதோறும் பிப்ரவரி 1-ஆம் தேதி கல்பனா சாவ்லாவின் நினைவு தினத்தைக் கடைப்பிடித்து வருகிறது. கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வீரதீர சாதனை புரிந்த பெண்களுக்கு 'கல்பனா சாவ்லா விருது' தமிழக அரசு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com